### கழக இளைஞர் அணியின்

# அடுத்த Innings -ஐ ஆரம்பிக்கலாமா?

### 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 21-

கழக இளைஞர் அணி 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள வலைதளப் பதிவு வருமாறு:-

கழகம் நெருக்கடியில் இருந்த நேரத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான MISA_Batchஐ கொண்டு தொடங்கப்பட்ட நம் கழக இளைஞர் அணி, இன்றைக்கு 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கொள்கைப் பணிமக்கள் பணிகளைக் களத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாற் போல் முன்னெடுக்கக் காத்திருக்கும் கழக இளைஞர் அணியின் அடுத்த Inningsஐ ஆரம்பிக்கலாமா..!

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



### இளைஞர்களின் எழுச்சியே

# திராவிட இயக்கத்தின் அசைக்க முடியாத வலிமை!

### முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வாழ்த்துச் செய்தி!

விருதுநகர், ஜூலை 21-

தி.மு.க. இளைஞர் அணி 47வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, தமது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

46 ஆண்டுகளாகக் கொள்கையை உயிராகவும், சமூக நீதியை இலட்சியமாகவும், தமிழர் உரிமையை காப்பதை அடையாளமாகவும் கொண்டு எண்ணற்ற இளைஞர்களை உருவாக்கி, இன்று



47 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பெருமைமிகு இயக்கம் தி.மு.க. இளைஞரணி.

காலம் மாறினாலும், தலைமுறைகள் மாறினாலும், திராவிடச் சிந்தனையையும் மக்கள் பணியையும் முன்னெடுத்துச் செல்லும் உறுதியான சக்தியாகக் கழகத்தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, இளைஞரணியின் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இளைஞரணி திகழ்ந்து வருகிறது.

கழகத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும், ஒவ்வொரு மக்கள் போராட்டத்திற்கும், ஒவ்வொரு களப்பணிக்கும் பின்னால் தன்னலமின்றி உழைக்கும் இளைஞர்களின் வியர்வையும் அர்ப்பணிப்பும் நிறைந்திருக்கிறது என்றும் கழகக் கொள்கையை உயர்த்திப் பிடித்து வரும் தி.மு.க. இளைஞரணியின் ஒவ்வொரு உடன்பிறப்பிற்கும், இந்த இளைஞர் கூட்டத்தைச் சிறப்புற வழிநடத்தி வரும் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

---

### ‘நீட்’ தேர்வு குளறுபடி விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வலியுறுத்தி

## நாடாளுமன்றம் நோக்கி பேரணி செல்ல முயன்ற

# கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் மீது போலீசார் தடியடி - இணையதளம் துண்டிப்பு, மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடல்!











புதுடெல்லி, ஜூலை.21

தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வு உள்பட பல தேர்வுகளில் ஏற்பட்ட குளறுபடிகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா(சிஜேபி) கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் கடந்த ஜூன் 28ம் தேதி முதல் உண்ணா விரதப் போராட்டத்தை தொடர்ந்து வரும் நிலையில், நேற்று முன்தினம் அவர் வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றப் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்றம் நோக்கி நேற்று காலை அமைதிப் பேரணி நடத்தவுள்ளதாக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) முன்னதாக அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் நேற்று காலை நாடாளுமன்றத்தை நோக்கி அமைதி பேரணி நடத்த கரப்பான் பூச்சி ஜனதா கட்சியை சார்ந்தவர்கள் புறப்பட்டனர். மேலும் இந்தப் போராட்டத்தில் ஏராளமான மாணவர்கள், பெற்றோர்கள் என 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதையடுத்து பேரணியாக செல்ல முயன்றவர்களை ஜந்தர் மந்தர் போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் அப்பகுதி முழுவதும் பரபரப்பான சூழல் நிலவுகிறது. குறிப்பாக பேரணியில் இருந்து கலைந்து போகும்படி போலீசார் றியதால் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை சார்ந்தவர்களுக்கும், போலீசாருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் பேரணி செல்ல முயன்றவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர். இதில் பலக்கு காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டக் காரர்கள் போலீசாரின் தடுப்புகளையும் மீறி நாடாளுமன்றத்தை நோக்கி மெல்ல மெல்ல முன்னேறி வருகின்றனர். இதையடுத்து கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின்தலைவர் அபீஜித் தீப்கே,”நாங்கள் அமைதியான முறையில், நாடாளுமன்றம் நோக்கி பேரணி செல்ல திட்ட மிட்டுள்ளோம். ஆனால், எங்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க காவல்துறை திட்டமிட் டுள்ளது என்று தெரியவில்லை. ஜந்தர் மந்தர் அருகே கற்கள் நிரப்பப் பட்ட லாரி ஒன்று நிறுத் திவைக்கப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எங்களுக்கு எழுப்புகிறது” என்றார்.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் தொடங்கிய நிலையில் இந்த பேரணி விவகாரம், நாடாளுமன்ற கூட்டத்தின் முதல் நாளில் எழுப்பப்பட உள்ளது. குறிப்பாக சிஜேபியின் இந்த போராட்டத்தால் தலைநகர் டெல்லி முழுவதும் பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

#### போலீசார் குவிப்பு

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் நாடாளு மன்றத்தை நோக்கி செல் லும் பேரணியை தடுக்கும் விதமாக, நாடாளு மன்றம். சென்ட்ரல் செக்கெரட் டேட், பட்டேல் சவுக், ராஜீவ் சவுக், ஜன்பத் ஆகிய பகுதிகள் முழுவ தும் டெல்லி போலீசாரின் முழு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஒவ்வொரு இடங்களிலும் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அதேப்போன்று அந்த பகுதிகளில் போக்குவரத்தும் முழுமையாக துண்டிக் கப்பட்டுள்ளது. இதனால் காலை நேரத்தில் அலுவ லக பணிக்கு செல்லும் ஆயிரக்கணக்கானோர் மிகுந்த சிரமத்திற்கு உள் ளாகி உள்ளனர்.

#### மெட்ரோ ரயில் நிலையம் மூடல்

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் பேரணிக்கு அதிகப்படியானோர் கூடாத வகையில் சாலை கள் இரும்பு தடுப்பு வேலிகள் கொண்டு மூடப்பட்டுள்ளது. இருப்பினும் பாதுகாப்பு காரணங்களை அடிப்படையாக கொண்டு சென்ட்ரல் செக்கெரட்டேட், பட்டேல் சவுக், ஜன்பத் ஆகிய மூன்று மெட்ரோ ரயில் நிலையங்களிலும் காலை முதலே ரயில் நிற் கவில்லை. மேலும் ரயில் நிலைய ங்களும் தற்காலிக மாக மூடப்பட்டுள்ளது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு டெல்லி மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் தரப்பில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது.

#### இணையதளம் துண்டிப்பு

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நாடாளுமன்றத்தை நோக்கி நடத்தும் பேரணிக்கு சாரை சாரையாக மக்கள் திரண்டுள்ளனர். இருப்பினும் அதிகப்படியான கூட்டத்தை கூட்ட வேண்டும் என்பதற்காக, பங்கேற்றவர்கள் அனைவரும் செல்போன் மூலம் பலரையும் பேரணியில் கலந்து கொள்ள அழைத்து வருகின்றனர். இதனால் பிற் பகலுக்கு மேல் தற்போது இருக்கும் கூட்டத்தை விட ஜந்தர் மந்தரில் மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது. இருப்பினும் அதனை கட்டுப்படுத்தும் விதமாக இணையதள தொடர்பு முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் செல்போன்கள் செயல்படாதவாறு ஜாமர் கருவி பொருத்தப்பட்டு உள்ளது.

---

### நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியாக பேரணியில் ஈடுபட்டிருந்த

# CJP இளைஞர்கள் மீது தாக்குதல் - அதிர்ச்சியளிக்கிறது!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



சென்னை,ஜூலை.21-

**நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியாக பேரணியில் ஈடுபட்டிருந்த CJP இளைஞர்கள் மீது தாக்குதல் – டெல்லியில் இருந்து வரும் காட்சிகள் அதிர்ச்சியளிக்கின்றன என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**சட்டமனற் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:**

நீட் (NEET) தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியான முறையில் பேரணியில் ஈடுபட்டிருந்த CJP அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் மீது காவல்துறை காட்டிய அடாவடித்தனத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

டெல்லியிலிருந்து வரும் காட்சிகள் அதிர்ச்சியளிக்கின்றன.

அவர்களின் கவலைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, அரசு தனது காவல்துறையைக் கொண்டு ஒடுக்குமுறையை மேற்கொள்கிறது. ஜனநாயகத்தில் இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று திமுக வலியுறுத்தி வருகிறது.

இன்று, நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டின் குரல், நாட்டின் தலைநகரம் உட்பட நாடு முழுவதும் எதிரொலிக்கிறது.

நாட்டு இளைஞர்களின் கோரிக்கை தெளிவானது. அவர்களின் குரலுக்குச் செவிசாயுங்கள். #BanNEET

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டார்.

---

### சி.ஜே.பி, ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றம் நோக்கி பேரணியில் பங்கேற்ற

# மாணவர்கள் - இளம் போராட்டக்காரர்கள் மீது தடியடி நடத்துவதா?

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



சென்னை,ஜூலை.21-

சி.ஜே.பி. ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள், போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தடியடிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

சி.ஜே.பி. ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்றப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் இளம் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தடியடியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நமது கல்வி முறையில் உள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்த தீவிரமான கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, மத்திய பாஜக அரசு பேச்சு வார்த்தைக்குப் பதிலாக மிருகத்தனமான வன்முறையைப் பயன்படுத்தத் தேர்ந்தெடுத்துள்ளது.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.



